ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** புள்ளிவிபரத் திணைக்களம்

**திகதி** 2017 யூன் 15

## இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் அளவீடு – 2017 மே

- **தயாரிப்புத் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்** மே மாதத்தில் 57.9 சுட்டெண் புள்ளிகளை பதிவு செய்ததுடன், இது 2017 ஏப்பிரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் 16.1 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பாகும். இது 2017 மேயில் தயாரிப்பு நடவடிக்கைகள் மீட்சியடைந்தமையினை குறித்துக்காட்டுவதுடன் 2017 ஏப்பிரலில் அவதானிக்கப்பட்ட பருவகால சுருக்கத்தினை தொடர்ந்து உற்பத்தி மற்றும் புதிய கட்டளைகள் துணைச்சுட்டெண்களின் விரிவாக்கம் பெரிதும் காரணமாக அமைந்தது. மேலும், தொழில்நிலை துணைச்சுட்டெண்ணினை தவிர கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணின் அனைத்து துணைச்சுட்டெண்களும் நடுநிலையான 50.0 அடிமட்டத்திற்கு மேலான பெறுமானங்களை பதிவு செய்தன. எவ்வாறாயினும், மாதத்தின் 25ம் நாள் தொடக்கம் உணரப்பட்ட பாதகமான காலநிலை நிலைமைகளால் உருவாகிய தொழிலாளர் வரவின்மை மற்றும் நீட்சியடைந்த நிரம்பலர் வழங்கல் நேரத்தின் அளவு காரணமாக, நடவடிக்கைகளில் எதிர்பார்க்கப்பட்ட மீட்சியினை மெதுவடைய செய்தது. இருப்பினும்கூட, நடவடிக்கைகளின் எதிர்பார்ப்பு அடுத்த மூன்று மாதங்களுக்கான ஒரு மேம்பாடோன்றினை எடுத்துக்காட்டியது.

- **பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்** 2017 ஏப்பிரலில் 54.2 சுட்டெண் புள்ளியிலிருந்து மே மாதத்தில் 55.3 சுட்டெண் புள்ளிகளை பதிவு செய்தது. பணிகள் துறையில் ஏற்பட்ட இவ் மிதமான அதிகரிப்பிற்கு புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள் மற்றும் தொழில்நிலை போன்றன ஆதரவளித்தன. தொழில்நிலையில் ஏப்பிரல் 2017ல் ஏற்பட்ட சுருக்கத்தினை தொடர்ந்து மேயில் ஒரு மீட்சியினை அவதானிக்க கூடியதாக இருந்தது. நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்புகள், பாதகமான காலநிலை நிலைமைகள் மற்றும் குறிப்பிட்ட துணைத்துறைகளில் காணப்பட்ட உச்ச மற்றும் பண்டிகை பருவக்காலங்களின் தாக்கம் படிப்படியாக குறைவடைந்தமை போன்ற காரணங்களினால் மெதுவடைந்து காணப்பட்டது. நிலுவையிலுள்ள பணிகள் குறைவடைந்து, அளவீடு ஆரம்பித்ததிலிருந்து அவதானிக்கப்பட்ட போக்கினை தொடர்ந்திருந்தது. விதிக்கப்பட்ட விலைகள் ஏப்பிரல் 2017 உடன் ஒப்பிடுகையில் குறைவடைந்த கேள்வி காரணமாக மே 2017ல் குறைவடைந்திருந்தது. இதேவேளையில், தொழிலாளர் செலவிற்கான எதிர்பார்ப்புகளும் ஏப்பிரலில் ஒன்றுசேர்ந்த ஆண்டிற்கான அதிகரிப்பினை தொடர்ந்து மே 2017ல் மிதமடைந்திருந்தது.

| | ஆ/மா | சன | பெப் | மாச் | ஏப் | மே | யூன் | யூலை | ஓகத் | செத் | ஒத் | நவெ | திசெ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், தயாரிப்பு | 2015 | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | 67.3 | 57.5 | 55.5 | 56.5 | 53.2 | 57.8 | 54.8 | 57.9 |
| | 2016 | 51.9 | 55.3 | 60.7 | 41.6 | 47.9 | 55.1 | 50.6 | 53.5 | 57.7 | 56.5 | 58.4 | 58.3 |
| | 2017 | 56.2 | 57.1 | 66.5 | 41.8 | 57.9 | - | - | - | - | - | - | - |
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், பணிகள் | 2015 | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | 66.8 | 65.0 | 60.6 | 59.8 | 61.7 | 59.5 | 59.3 | 60.2 |
| | 2016 | 58.0 | 59.3 | 61.6 | 54.7 | 58.1 | 56.3 | 57.8 | 61.2 | 57.7 | 59.3 | 59.7 | 59.8 |
| | 2017 | 57.5 | 57.3 | 60.8 | 54.2 | 55.3 | - | - | - | - | - | - | - |

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்



**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.
கொ.மு.சு = 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு > 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு < 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.